# தேவனுடைய உண்மையான மிகச்சிறந்த சித்தம்

## 3.6 தேவ இராஜ்யத்தைக் கட்டுதல்




**வேத வசனம்:** **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.**

*மத்தேயு 6:33*

**அறிக்கை:** **நான் தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டவும் இயேசுவை இராஜாவாக அனுமதிக்கவும் வேண்டும்**



**சத்தியம்:** மனிதனுக்கான தேவனுடைய இரட்சிப்பு அவனை இருளின் வல்லமையில் இருந்து விடுதலையாக்கி அவருடைய மகிமையுள்ள இராஜ்யத்திற்குள் கொண்டு வருகிறது.

### வேதப் பகுதி: மத்தேயு 6:25-34

**பாடம்**

**1. நமது வாழ்விற்கான தேவனுடையச் சித்தம்:** தேவன் நாம் அனைவரும் அவருடைய உன்னதமான இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கும்படி விரும்புகிறார். ஆகையால் நாம் அவருடைய ராஜ்ஜியத்தை உலகில் கட்டி எழுப்பும்படி கேட்டுக்கொண்டார். வரப்போகிற தேவனுடைய ராஜ்ஜியம் நம் கண்களுக்குப் புலப்படாது என்று லூக்கா 17:21 தெளிவாகக் குறிப்பிடுகிறது. காரணம் தேவனுடைய ராஜ்ஜியம் என்பது நம்முடைய இருதயத்தில் இருக்கிறது. மனிதர்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைத் தங்கள் உள்ளங்களில் ஏற்றுக்கொள்ளும்போது அவர்கள் தேவராஜ்ஜியத்தின் மக்களாக மாறுகிறார்கள். அவர்கள் இருளின் ஆதிக்கத்திலிருந்து வெளியேறி தேவனுடைய நித்திய ராஜ்ஜியத்துக்குள்ளாகவும், பாவ வாழ்விலிருந்து புதிய வாழ்வுக்குள்ளும் வந்தடைகிறார்கள். (கொலோ. 1:13-14)

**2. அழிக்க அல்ல, கட்ட:** நாம் கூறுவது மிகவும் முக்கியமானது. வார்த்தைகள் ஒருவேளை பிறரை மாற்றவோ தேவனை அறிந்துகொள்ள உதவவோ செய்யலாம் அல்லது காயப்படுத்தவோ, தடுமாற்றமடையச் செய்யவோ, கர்த்தர் மேல் உள்ள விசுவாசத்தைக் குலைக்கவோ செய்யலாம். வார்த்தைகள் பிறரை மாற்றவோ அல்லது காயப்படுத்தவோ செய்யும். உதாரணத்திற்குப் பழக்க வழக்கங்களைக் கிண்டல் செய்வது பிறரைக் காயப்படுத்தும். தேவன் அன்பானவர். கருணை உள்ளம் கொண்டவர். அவர் பிறருடைய வாழ்வைக் கட்டியெழுப்பவே விரும்புகிறார். கர்த்தர் உலகில் மாம்ச சரீரத்தில் இருக்கும்போது பல பட்டணங்களுக்கும் கிராமங்களுக்கும் நடந்து சென்று வேதனையில் இருந்தவர்களுக்கும் நம்பிக்கையற்று இருந்தவர்களுக்கும் உதவிகள் செய்தார். அவர் தொழுநோயாளிகளைத் தமது கரங்களால் தொட்டு அவர்களைச் சுகமாக்கவும் செய்தார். (1 யோவான் 4:8, மாற்கு 1:40-41)

**3. பரலோக இராஜ்யத்தைக் கட்ட:** யோவான் ஸ்நானகன், வரப்போகிற இயேசுவைக்குறித்துப் பிரசங்கித்தார் என்று வேதம் குறிப்பிடுகிறது. அவர் மிகுந்த சத்தமாக, "வசனம்". கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோக இராஜ்ஜியத்தைக்குறித்துப் போதித்து வந்தார். மக்களை தேவனுடைய ராஜ்ஜியத்துக்குள் திரும்ப வரவழைப்பது தேவனுடைய சித்தம் என்பதை அவர் அறிந்திருந்தார். (மத்தேயு 3:1-3, 9:35-36)

**4. அதிக சமாதானத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற:** "வசனம்" என்று வேதம் குறிப்பிடுகிறது. நாம் முழு மனதுடன் தேவ ராஜ்யத்தின் சித்தத்தை நேசிக்கவேண்டும். ஆத்துமாவைக்காட்டிலும் உலகத்தின் பொருட்களை அதிகம் நேசிக்கக்கூடாது. தேவனுடைய சித்தம் செய்பவர்களை தேவன் அதிகம் ஆசீர்வதிக்கிறார். தேவன் அனைத்து தேவைகளையும் சந்திக்கிறவர். கருத்தாக தேவசித்தத்தைச் செய்கிறவர்கள் மெய்யாகவே தேவனுடைய வழிநடத்துதலையும் மிகுந்த சமாதானத்தையும் பெறுவார்கள். (சங். 16:11, 37:4)

**முடிவுரை:** நம் எதிர்காலத்தைக்குறித்து நாம் கவலைப்படாமல் தேவ ராஜ்யத்தைக் கட்டுகிறவர் களாகவும் இயேசுவே ராஜா என்பதைப் பிறர் அறிந்துகொள்ள உதவி செய்கிறவர்களாகவும் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.